உ



தென்மராட்சி நாவற்குழியை

பிறப்பிடமாகவும் குரும்பசிட்டியை

வசிப்பிடமாகவும்

தற்காலிக வதிவிடமாய் சுதுமலையையும்

கொண்ட

# பண்டிதர் வல்லிபுரம் நடராசா

அவர்களின்

# நினைவு மலர்

16-09-2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றம்

11

11


1915

மறைவு

17

08

2000



# அமரர் பண்டிதர் வல்லிபுரம் நடராசா

**திதி நிர்ணய வெண்பா**

ஆண்டாகும் விக்கிரம ஆவணியைச் சாரபரம்
ஈண்டு துதியைதிதி எந்நலமும் --பூண்டமகன்
நல்லறிஞ ராகும் நடராசா தெய்வஅடி
புல்லப் பிரிந்த பொழுது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பஞ்ச புராணம்

### தேவாரம்

அந்த ணாளனுன் அடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரண மாக
வந்த காலன்றன் ஆருயி ரதனை
வவ்வினாய்க் குன்றன் வன்மைகண் டடியேன்
எந்தை நீயெனை நமன்தமர் நலியில்
இவன்மற் றென்னடி யானென விலக்கும்
சிந்தையால் வந்துன் திருவடி யடைந்தேன்
செழும்பொழில் திருப்புன் கூரு ளானே.

### திருவாசகம்

மெய்தான் அரும்பி விதிர்விதித்துன்
விரையார் கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்த்துன்னைப் போற்றி
சயசய போற்றியென்னுங்
கைதான் நெகிழவிடே னுடையாய்
என்னைக் கண்டுகொள்ளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக்கண் உடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் அற்பதக் கூத்தா
அம்பொன்செய் அம்பலத் தரசே
ஏறணி கொடியெம் ஈசனே உன்னைத்
தொண்டனேன் இசையுமா றிசையே.

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சிலதேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரண்மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண்டெனும் பதங்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத வின்பவன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமைவேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உனையென்றும்
மறவாமைவேண்டும் இன்னும் வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ யாடும்போதுநின் னடியின்கீழ் இருக்க வென்றார்.

## திருப்புகழ்

இசைந்தஏறும் கரியுரிபோர்வையும் எழில்நீறும்
இலங்குநூலும் புலியதளாடையும் மழுமானும்
அசைந்ததோடுஞ் சிரமணிமாலையும் முடிமீதே
அணிந்தஈசன் பரிவுடன்மேவிய குருநாதா
உசந்தசூரன் கிளையுடன்வேரற முனிவோனே
உகந்தபாசங் கயிறொடுதூதுவர் நலியாதே
அசந்தபோதென் துயர்கெடமாமயில் வரவேணும்
அமைந்தவேலும் புயமிசைமேவிய பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர், பண்டிதர் வ.நடராஜா அவர்கள் வாழ்க்கைக் குறிப்பு

ஈழவள நாட்டின் வடபால் அமைந்துள்ள சிற்றூர் குரும்பசிட்டி. கல்விமான்களும் கலைவல்லாளரும், கைத்தொழில் கமத்தொழில்விற்பன்னரும் வணிகச்செல்வரும் வாழ் ந்து இவ்வூரின் பெருமையை உலகறியச் செய்து வரலாயினர். இவ்வாறு இச்செம்மண் பூமிக்குச் செழுமை சேர்த்த பெருந்தகைகளுள் பண்டிதர் வ. நடராஜா அவர்களும் ஒருவர்; கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகப் "பண்டிதர்" என்ற பட்டத்து க்கு ஏக நாயகராக விளங்கி வந்தார்.

குடும்பம்

1915 ஆம் ஆண்டு நாவற்குழியில் வல்லிபுரம் மாணிக்கம் தம்பதிகளின் கனிஷ்ட புத்திரராக நடராஜா அவதரித்தார். பதினோராவது வயதில் தனது கல்வியைத் தொடரும் நோக்கோடு குரும்பசிட்டி வந்து, தனது பெரியதந்தை சின்னத்தம்பியுடன் வாழ்ந்து வந்தார்.

1943 இல் குரும்பசிட்டியைச் சேர்ந்த வேதாரணியம் பாறுபதி தம்பதிகளின புத்திரி மனோன்மணி எனும் நல்லாளை அன்னார் மணந்து கொண்டனர். இவர்கள் இல்லற நல்லற வாழ்வின் பயனாக பிள்ளைகள் எண்மரைப் பெற்று மகிழ்ந்தனர். அவர்களைக்கற்பன கற்றுக் கற்றாங் கொழுகச் செய்து நல்வாழ்வு காண வழியும் அமைத்தனர்.

முறையே சக்திதாசன் எழுதுவினைஞராகி தேவிதாரணியை (சித்தன்கேணி) மணமுடித்து அஜித், கஜன் என்னும் புதல்வரைப் பெற்றார்;காளிதாசன் ஆசிரியராகி, ஆசிரியை தனலட்சுமியை(குரும்பசிட்டி) மணந்து தேவகாந்தன் என்னும்புதல்வரைப் பெற்றார்.சண்முகதாசன் இலங்கைவங்கி முகாமையாளராகி குரும்பசிட்டி நந்தினியைக் கைப்பிடித்து பிரசாந், சோபாஎன்னும் புதல்வரைப் பெற்றார்; யோகதாசன் தனியார் வர்த்தக லிகிதராகி நாகேஸ்வரியை மணந்து புகழினி, அருண் என்னும் புதல்வரைப் பெற்றார். தனலட்சுமி வைத்திய கலாநிதியாகி, வைத்திய கலாநிதி சண்முகதாசனை (புத்தூர்) மணந்து டினேஸ் என்னும் புதல்வருடன் லண்டன் நகரில் வாழ்ந்து வருகிறார். ஜெயலட்சுமி சீமெந்துத் தொழிற்சாலை ஊழியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்முகராசாவை மணந்து சாதனா, றோகன் ஆகிய புதல்வரைப் பெற்றார்; நித்தியலட்சுமி ஆய்வக அலுவலர் (இன்று ஆசிரியர்) கோபாலமூர்த்தியை (மீசாலை) மணந்து ராஜீவ் என்னும் புதல்வரைப் பெற்றார்; சுகிர்தலட்சுமி லவனை( உடுவில்) மணந்து வினோத், சௌமியா என்னும் புதல்வரைப் பெற்று டென்மார்க்கில் வாழ்ந்து வருகிறார். இவ்வாறு பண்டிதர் அவர்கள் பேரர்கள் பதின்மூவரைக் கண்டு மகிழ்ந்தனர்.

## கல்வி

நாவற்குழியிற் பிறந்த நடராஜா அவர்கள் ஐந்தாம் வகுப்புவரை அங்கு கல்வி கற்று மேல்வகுப்புகள் இன்மையால் குரும்பசிட்டி வந்து 1926 இல் மகாதேவாவித்தியாசாலையில் (இன்றைய பொன். பரமானந்தர் வித்தியாலயம்) ஆறாம் வகுப்பில் சேர்ந்து கொண்டனர்.எட்டாம் வகுப்புக் கற்றுத் தேறியதும் ஆங்கிலக் கல்வி பெறும் நோக்கோடு தெல்லிப்பளை அமெரிக்கன் மிஷன் பாடசாலை சென்றாராயினும் பின் அதனைக் கைவிட்டு மீண்டும் மகாதேவா வித்தியாசாலைக்கு வந்து கல்விகற்று எஸ்.எஸ்.எல்.சி வகுப்பில் சித்தியடைந்தார்.

## ஆசிரியப்பணி

நாவற்குழியின் கீழ்த்திசை ஊரான கொயிலாக்கண்டி மகாலக்குமி வித்தியாசாலையில் அன்னாரது ஆசிரியப்பணி ஆரம்பமாகியது. பின்பு இளவாலை மெய்கண்டான் வித்தியாலயம், குப்பிளான் விக்னேஸ்வர வித்தியாலயம், திருநெல்வேலி முத்துதம்பி வித்தியாலயம் ஆகியவற்றிற் சேவையாற்றி 1955முதல் 1967வரை சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் கடமையாற்றினார். ஸ்கந்தாக்காலம் அன்னாரது ஆசிரியப்பணியின் உச்சகாலமாக விளங்கியதெனலாம். உயர்தர வகுப்புகளுக்குத் தமிழ் பேராசானாக விளங்கிப் பல மாணவர்களைப் பல்கலைக் கழகத்துக்கு அனுப்பி வைத்தார். தனது புத்திரர்கள் நால்வரையும் ஸ்கந்தாவிலேயே கற்கச் செய்தார்.அங்கு பன்னிரு ஆண்டுகள் சேவையாற்றிய பின் கொழும்பு சென்று ஓய்வுபெறும் காலம்வரை கல்விவெளியீட்டுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திணைக்களத்தில் பாடநூல் எழுத்தாளராகவும் பணி புரிந்தார்.

## இலக்கியப்பணி

குரும்பசிட்டி, ஈழகேசரி நா.பொன்னையா அவர்கள் பண்டிதரின் நுண்மாண் நுழைபுலத்தையும் ஆற்றலையும் கண்டு தனது செயற்பாடுகளில் ஈடுபடச்செய்தார். "தனது வழிகாட்டி பொன்னையா அவர்களே" என்று, என்றும் பெருமிதம் கொண்டவர் பண்டிதர் அவர்கள். ஈழகேசரிப்பத்திரிகையின் உயர்வுக்குப்பண்டிதர் வழங்கிய பங்களிப்பு மகத்தானது. ஈழகேசரியால் பண்டிதர் வளர்ந்தார்; பண்டிதரால் ஈழகேசரி வளர்ந்தது எனலாம். ஈழகேசரியில் அன்னார் வரைந்த இலக்கியக் கட்டுரைகள் அறிஞர்களால் பெரிதும் பாராட்டப் பட்டன.

வசனநடை கைவந்த வல்லாளராக விளங்கிய பண்டிதர், பொன்னையா அவர்கள் வழங்கிய உற்சாகத்தால் பல பாடநூல்களை எழுதலானார். இலக்கியமஞ்சரி, உரைநடைவிருந்து, மொழிப்பயிற்சி, மற்றும் சகுந்தலைசரிதை, மணிமேகலை முதலான நூல்களை எழுதி மாணவமுதாயத்துக்குச் செந்தமிழின் தீஞ்சுவையைப் பருகச் செய்தார். அப்படைப்புக்களது சிறப்பே அன்னாரைக் கல்வி வெளியீட்டுத் திணைக்களப் பாடநூற் சபைக்கு அழைப்பு விடுத்தது.

## சமூகப்பணி

ஈழகேசரி பொன்னையா அவர்கள் பத்திராதிபராக, பதிப்பாசிரியராக விளங்கியது மட்டுமன்றி அன்றைய காலகட்டத்தின் நாடறிந்த சமூகசேவகராக விளங்கினார். அவரதுசேவை சொந்தக்கிராமத்திலும் சுடர்விட்டுப் பிரகாசித்தது. சன்மார்க்கசபை என்னும் நிறுவனத்தின் பிதாமகராகி, தனது நம்பிக்கைக்கும், விசுவாசத்துக்குமுரியவரான பண்டிதர் அவர்களை அதன் செயலாளராகப் பணிபுரியச்செய்து மகிழ்ந்தனர்.அதனைப் பயிற்சிப் பண்ணையாகக் கொண்ட பண்டிதர் அவர்கள் பண்பட்ட ஒரு மனித நேயராக மாறியது மட்டுமன்றிச் சிறந்த ஓர் இலக்கியச் சொற்பொழிவாளராகவும் எழுச்சி பெற்றார். இவரது வித்துவத்தையும் பேச்சாற்றலையும் இங்கு விஜயம் செய்த தென்னிந்தியத் தமிழ் அறிஞர்கள் பலரும் பாராட்டினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னையா அவர்களது மறைவுடன் குரும்பசிட்டிச் சமூகப் பணிகளின் அடித்தளம் எதர்பாராத விதமாக ஆட்டங்காணலாயிற்று. எனினும் பொன்னையா காட்டிய வழியில் அவரது பணிகளை, இலட்சியக் கனவுகளை நிறைவு செய்ய முற்பட்ட பண்டிதர் அவர்கள் குரும்பசிட்டி கிராம அபிவிருத்தி சங்கத்தை ஊர் மக்களது உறுதுணையுடன் கட்டிக்காத்து அரும்பணிகளைத் தொடரலானார்.

தனது குடும்பமாக ஊரினைக் கருதிய பண்டிதர் அவர்கள் அதற்காகத் தனது இலக்கிய பணிகளையே தியாகம் செய்தார் எனலாம். சாதாரண விவசாயிகள் தொழிலாளிகளின் நலனுக்கு உழைப்பதில் மனநிறைவு கண்டார். குரும்பசிட்டியின் கடந்த 50 ஆண்டுகால வரலாற்றில் எல்லாப் பொது நிகழ்வு களிலும் நடவடிக்கையிலும் பண்டிதரின் பாதம் பதிந்துள்ளது

பொன்னையா அவர்களது முக்கிய பணிகளில் ஒன்றாகக் கூட்டுறவு இயக்கம் அமைந்திருந்தது. அவ்வழிபற்றிப் பண்டிதர் அவர்கள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகள் மகத்தானவை. தாய்ச் சங்கத்தின் இயக்குனர் சபையிலும் இடப்பெற்றுப் பணிபுரிந்தார்.

## அரசியற் பணிகள்

“ஏனைய பண்டிதர்களைவிட நடராஜாப் பண்டிதர் வித்தியாசமானவர்” என்று பலரும் கூறுவதுண்டு. காரணம் வைதீக பண்டிதப் போக்கிலிருந்து விடுபட்டு ஒரு முற்போக்கு அரசியற் சிந்தனையாளராக அன்னார் விளங்கியமையே ஆகும்.பேரினவாத ஒடுக்கு முறைகள் வியாபித்த போது 1970 களில் அதற்கு எதிர்ப்பளித்த சக்திகளோடு தன்னையும் இணைத்துக் கொண்டார்

நல்லதோர் குடும்பத்தலைவராக, நாடறிந்த இலக்கிய விற்பன்னராக, துறைபோகக் கற்றுத் தேர்ந்த பேராசானாக , ஓய்வு ஒழிவற்ற சமூகசேவகனாக, பண்பட்ட அரசியற் தொண்டனாக வாழ்ந்து காட்டிய பெருமகன் பண்டிதர் அவர்கள் அன்னார் அமரத்துவம் எய்தியமை ஈடுசெய்யமுடியா இழப்பே ஆகும்.அன்னாரது ஆன்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

சாந்தி! சாந்தி! சாந்தி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது ஆசிரியத் தெய்வம் பண்டிதர் வ.நடராசா

பல்கலைக்கழகத்தில் அரங்கேறி கல்விப்புலத்தில் உயர் நிலை அடைய காரணகர்த்தாவாக இருந்தவர் எனது ஆசிரியத்தெய்வம் அவர்களே. க.பொ.த உயர்வகுப்பில் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் தமிழ்ப்பாடத்தில் இலக்கணம் கற்பிக்கும் பொழுது "இலக்கணத்தைக்கண்டு பயப்படாதீர்கள்" என்று கி.வ.ஜகநாதன் எழுதிய நூலை ஆதாரம் காட்டி இலக்கணம் கற்பிக்க தொடங்கினார்.இலக்கண நன்னூல் சூத்திரத்தை அணுஅணுவாக விளக்கி தெளிவாக்கியவர் எனது தெய்வம் அவர்களே. அந்த சூத்திரவிளக்கம் தமிழில் கூடிய புள்ளியை எடுத்துதந்து பல்கலைக்கழக நுழைவாசலை எனக்கு காட்டியது.

அதுமட்டுமல்லாமல் இலக்கணத்தில் ஆர்வத்தை ஊட்டி யான் கற்பித்த காலத்தில் மாணவச்செல்வங்களுக்கு இலக்கணத்தில் கூடிய புள்ளியைப்பெற வைக்க வழிகாட்டியவர் ஐயா அவர்களே.

அவர்களை இறுதியாக இடம்பெயர்ந்து திருநெல்வேலியில் வாழ்ந்தகாலத்தில் அவரது பாததரிசனம் கிடைத்தது மட்டும் அல்லாமல் வசாவிளான் மக்கள் விழாக்கோலம் கண்டபொழுது அங்கு சென்று மாலைஅணிவித்து மரியாதை செலுத்த கிடைத்தமை யான் பெற்ற பேறு.அவர்களைத் தமிழ் உலகம் இனிதுகூற அவர் படைத்த நூல்கள் சாட்சியம். யான் படைத்த நூல்களைக் கொடுத்த பொழுது அவர்தான் இறுதியாக எழுதிய"இறை ஒருவர்" நூலை அன்பளித்து மேலும் நூல்கள் படைக்க வேண்டும் என வாழ்த்தினார்.

**அவரது ஆத்மசாந்தி வேண்டி முடிக்கிறேன்.**

**கலாநிதி.ச.நா தணிகாசலம்பிள்ளை**
மேலதிகப் பணிப்பாளர்
யாழ்மாவட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச செயலகம்
உடுவில்
02.09.2000.

எனது அருமை ஆசான் பண்டிதர் திரு வ.நடராஜா அவர்களின் திடீர் மறைவுச்செய்தி கேட்டு அதிர்ச்சியும் கவலையும் அடைந்தேன். திரு.நடராஜா அவர்கள் குப்பிளான் விக்னேஸ்வர வித்தியாசாலையில் எனக்கு எண்ணும் எழுத்தும் கற்பித்தவர்.பின்னர் நான்சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் கல்வி கற்றபோது அங்கும் தமிழ் ஆசிரியராக அமர்ந்து எண்ணற்ற மாணவர்களுக்கு தமிழ்க் கல்வி புகட்டிஅரும்பணியாற்றியவர்.அவர் அன்பும்,பண்பும், அடக்கமும் ஆழ்ந்த நுண்மாண் நுழைபுலமும் மிகுந்தவர்.தமிழில் பலஇலக்கிய இலக்கண நூல்களையும் பாடப்புத்தகங்களையும் எழுதி தமிழ்க்கல்வி வளர்ச்சிக்கு, பெரும் பணியாற்றியவர்.இளைப்பாறிய பின்னர் கல்விப் பணியோடு சமூக சமயப் பணிகளிலும் தம்மை அர்ப்பணித்தவர்.குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவராக இருந்து அக்கிராமத்தின் வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் அயராது உழைத்தவர்.சிறந்த சிவ பக்தனாகிய அன்னாரின் பேச்சிலும் எழுத்திலும் ஆத்மீகக் கருத்துக்கள் செறிந்திருப்பதை நாம் அவதானிக்க முடியும்.அவர் ஒரு சிறந்த குடும்பத் தலைவனாக இருந்து தம் பிள்ளைகள் எல்லோருக்கும் நல்வழி காட்டிய பின்னர் இறைவனடி சேர்ந்து உள்ளார். தமிழ்மொழி வளர்ச்சிக்கும் கல்விக்கும் அவரது இழப்பு ஈடுசெய்ய முடியாததொன்றாகும்.

துயர்மிக்க இக்கால கட்டத்தில் அன்னாரது துணையை இழந்து வாடும் குடும்பத்தவர்க்கும் உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த அநுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்தி அடைய எல்லாம் வல்ல பார்வதி பரமேஸ்வரனைப் பிரார்த்திக்கின்றேன்

ஆ.மகாலிங்கம்
பிரதேசச் செயலர்
உடுவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகப் புகழ் நடராசனே

அருமைசேர் யாழ்ப்பாண
நல்நாவற் குழிதனில்
அரியவுயர் குடியில் வந்த
அண்ணலாம் வல்லிபுரம்
பெற்றபுத் திரனாகி
ஆசிரிய னாய்ப் பயின்று
பெரியதாம் பண்டிதத்
தேர்விலுந் தேறியே
பெற்றோர்மற் றோரும்வாழ்த்த
பிறங்கிடுங் குரும்பசிட்
டியில் வந்து நல்லோர்கள்
போற்றிடுங் குடியுதித்த
ஒருஞான கற்பகக்
கொடியாய் வளர்ந்திடும்
உத்தமி மனோன்மணியினை
உயரன்புப் பண்பினால்
வாழ்க்கைத் துணைவியாய்
ஒன்றா யதன்பயனினால்
உரிமையாம் புத்திரரைப்
புத்திரிக ளைப்பெற்று
ஒப்பில் கல் வியும் புகட்டி
உயர் மணமுஞ் செய்வித்து
உம்பருல கெய்தினை
உலகம் புகழ் நடராசனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செந்தமிழ்த் தோன்றல்

மறவாத பொன்னையா
வெனு மொரு திருமகன்
வாரமா வெழுதிவிட்ட
வருமீழ கேசரியில்
வளர்கின்ற கட்டுரைகள்
வகையான கதைகள் எழுதி
திறமான பாலபோ
தினியெனும் சிறுவர்க்காம்
சிறந்தபுத் தகமு மெழுதி
செப்பு மொரு சன்மார்க்க
சபைதனில் மேகமாய்ச்
செந்தமிழ் மழைபொழிந்தாய்
இறவாத புகழ் கொண்ட
மறையாளர் சதாசிவ
ஐயருடன் வேறு சிலரின்
இனிய வர லாறுகளை
வானொலியில் நிகழ்த்தியும்
இரும் பெயர் கொண்ட பெரியோர்
துறவாள னாயிந்த
வுலகத்தில் வாழ்ந்தினிய
சுவர்க் கமும் பெற்றுவிட்டாய்
தூய நடை பேசு நடை
வாழ்வுடைய செந்தமிழ்த்
தோன்றலே நடராசனே

**முது பெரும்புலவர், ஆசிரியர்**
**வை. க. சிற்றம்பலம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் அறிந்த பண்டிதர்



நானறிந்த பண்டிதரை நவின்றிட நினைத்தேன்
தேனிறைந்த சொல்லாற் பிணித்திடும் பண்பாளன்
தானிறைந்த கல்வியினாற் றகமையே பெற்றான்
வீண்பொழுது போக்காது வினைதனையே நாடிடுவான்
பூநிறைந்த இறைவர்வான் பூங்கழலைப் போற்றிடுவான்
பானிறைந்த கருத்தெல்லாம் பகன்றிடவே வல்லவனாம்
ஊனிறைந்த உடம்பினை யுதறிடும் முன்னமே
மீனிறைந்த வானமதில் மதியோல
வானிறைந்த புகழோனாம் நடராசப் பண்டிதனே.

அழுக்கறுக்க துயசிந்தை யந்தண்மை யடக்கம்
தழுவியிவை தனக்குரிய குணங்களாய்க் கொண்டோன்
பழுதற்ற நூற்கடலுள்படிந்துண்மை அறிந்தோன்
வழுவற்ற சொற்களஞ்சியமாய்த் திகழ்ந்தோன்
இழுக்கற்ற சைவநெறித் தொல்மரபில் வந்தோன்
தொழுதுயர் கல்வியினாற் தொல்மரபை நிலைநிறுத்திப்
பொழுதெல்லா மேடுகளாம் புலந்தினைப் பார்த்தோன்
வழுவியும் ஆசாரநெறி பிறழாத
விழுதாகவே நின்றதோர் பெருமைசேர் பேராளன்

அடியேனின் கம்பராமா யணச்சொற் பொழிவதனைத்
தடியூன்றும் தள்ளாத போதினிலும் வந்திருந்து
முடியும்வரை முழுதாகச் செவியினாற் பருகியே
வடிவுடைய பாராட்டும் வரைவின்றித் தந்தோன்
படிப்பதற்கே நூல்வேண்டின் என்மனைக்கே வந்திடுவார்
கடிதாகத் தாமவற்றைப் படித்ததும் தந்திடுவார்
பிடிபடாக் கருத்துக்கள் விளக்கங்க ளென்றிவற்றை
அடியேனுடன் அளவளாவிப் பழகியதோர்
விடிவெள்ளி யெனத்திகழ் பண்டிதரை மறப்போமோ.

நற்றமிழாய் நானிலத்தில் நலம்பெருக்கி வாழ்ந்தோன்
பற்றுடனே பலநூல்கள் பயின்றபெரும் புலத்தோன்
கற்றறிந்து காதலித்துத் தமிழவளைக் காத்தவனை
உற்றவளே தமிழணங்கே சாலவேஆசீர் வதித்திடம்மா.

சுதுமலை தெற்கு
01-09-2000

**அன்பன்**
பண்டிதர் – க. ஈஸ்வரநாதபிள்ளை

## ஆசிரியர் ~ எழுத்தாளர் ~ திறனாய்வாளர்

பண்டிதர் வ.நடராசன் அவர்களை ஓர் ஆசிரியராக தமிழ் இலக்கண இலக்கியம், சைவசமயம் ஆகியவற்றிலே மாணவர்களுக்குப் பற்றும் மதிப்பும் திறமையும் ஏற்படும் வகையிலே அவற்றைச் சுவையாகவும கவர்ச்சியாகவும் தெளிவாகவும் கற்பிக்கும் நல்லாசிரியராகவே பலர் அறிவர். அவர் ஓர் ஆசிரியர் மட்டுமல்லாமல் நல்ல தமிழ் எழுத்தாளராகவும் சமன்செய்து சீர்தூக்கும்கோல் போன்ற நல்ல திறனாய்வாளராகவும் திகழ்ந்தார் என்பதை இன்றைய தலைமுறையினர் பலர் அறியார். நவீன தமிழ் இலக்கிய வடிவங்களான சிறுகதை, நாவல் போன்றவற்றை அவர் எழுதாததும், எழுத்தாளர் சங்கங்களிலே அவர் உறுப்பினராகாததும் நவீன இலக்கிய நூல்களை அவர் வெளியிடாததும் இதற்கான காரணங்களாகலாம்.

பண்டிதர்கள் என்போர், பழந்தமிழ்இலக்கியம் தவிர்ந்த வேறு எந்த இலக்கியத்தையும் இலக்கியமாக ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்என்ற கருத்தைப் பொய்ப்பித்தவர்களுள் பண்டிதர் நடராசா அவர்களும் ஒருவர். வித்துவ சிரோமணி சி.கணேசையர் அவர்களுடன் இருபது ஆண்டுகளுக்கு மேலாக மாணவ நிலையிற் பழகி, அவர் அளித்த தமிழ் அமிர்தத்தை அள்ளி உண்ட நடராசன், இக்காலத்துப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் போன்றவற்றில் வெளியாகும் சிறுகதை, நாவல், கவிதை ஆகியவற்றையும் கருத்தூன்றி வாசித்தார். "ஈழகேசரி" யிலும் "கலைச்செல்வி" யிலும் அவர் எழுதிய விமர்சனங்களும், "கலைச்செல்வி" யில் எழுதிய "இலக்கிய பரம்பரை" என்ற தொடர்கட்டுரையும் அவரை ஓர் எழுத்தாளனாகவும் திறனாய்வாளனாகவும் நிலை நிறுத்துகின்றன பழமையில் நன்றாகக் கால்ஊன்றிக் கொண்டு புதுமையை வரவேற்கும் அவருடைய போக்கையும் காட்டுகின்றன.

இலக்கியப் பொருளின் நித்தியத்துவத்தினாலேயே, இலக்கியம் நித்தியத்துவம் அடைகிறது பொருளின் பூரணத்துவத்தினாலே இலக்கியமும் பூரணத்துவம் அடைகின்றது.எக்காலத்தும் பொருந்தவல்ல பொருள் அமைந்த இலக்கியங்கள் என்றும் நின்று நிலவும்.

இக்காலத்தில் நாவல் என வழங்கப் படும் "பெருங்கதை" களை, காவியங்களுடன் ஒப்பிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவியங்கள்,கதை அமைப்புடன் செய்யுள் நடை கொண்டன. நாவல்கள் கதை அமைப்புடன் வசன நடையுள்ளன. எனவே, "நாவல்கள் தமிழுக்குப் புதியன;ஆங்கில மொழிவழி வந்தன" எனக் கூறல், அத்துணை பொருந்தாது. ஆனால், ஆங்கில நாவல்கள தமிழ் நாவல் வளர்ச்சிக்கு உதவியிருக்கலாம்"

பண்டிதர் நடராசன் அவர்களின் இந்தக் கருத்துகள் பலரால் வரவேற்கப்பட்டுள்ளன; சிக்கலற்ற தெளிவான அவருடைய உரைநடைக்குச் சான்றாகவும் மிளிர்கின்றன.

தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் பண்டிதர் நடராசன் ஆற்றிய தொண்டுகளை ஆராய்ந்து மதிப்பீடு செய்வதற்கு இச்சிறிய கட்டுரை, யாரையாவது தூண்டுமானால், என் நோக்கம் நிறைவேறிவிட்டதென்ற திருப்தி எனக்கு ஏற்படும்; அடக்கமாக இருந்து தமிழ்ப்பணி செய்த அவரின் நினைவை நிலை நிறுத்தவும் உதவும். அச்சகக் கலையின் அமோகவளர்ச்சி இலக்கியத் தரத்தைப் பலிகொண்டு விடுமோ எனப் பலர் அஞ்சும் இவ்வேளையிற் பண்டிதர் அவர்களின் மறைவு, தமிழ் இலக்கியத் திற்குப் பேரிழப்பே என்பது மிகையன்று.



சிற்பி

காலன் வருமுன்னே கண்பஞ் சடை முன்னே
பால உண் கடைவாய் படும் முன்னே மேல்விழுந்தே
உற்றார் அழும்முன்னே ஊரார் சுடுமுன்னே
குற்றாலந் தானையே கூறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்டிதர் அவர்கள் பற்றிய நினைவலைகள்

தமிழும் சைவமும் தழைத்தோங்கும் யாழ்நன் நகரின் அணுத்தாய் விளங்கும் நாவற்குழி என்னும் கிராமத்தைப் பிறப்பிடமாகவும், இல்லற வாழ்க்கைக்கு கரம்பிடித்த குரும்பசிட்டியை வதிவிடமாகவும் விளங்கிய பண்டிதர் அவர்கள் சீரும் சிறப்புமாக வாழ்ந்து, நான்கு புத்திரர்களையும், நான்கு புத்திரிகளையும் பிள்ளைச் செல்வங்களாகப் பெற்று பார் போற்ற வாழ வைத்த பெருமை உடையவர்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

என்ற குறளின் பொருளுக்கு அமைய வாழ்ந்து காட்டிய பெருமை உடையவர். இவர் தமிழ், ஆங்கிலம் முதலிய மொழிகளில் தேர்ச்சி பெற்ற பண்டிதராவார். மேலும் இவரால் பல ஆக்கங்களும் விளக்கங்களும் இனிமையான தமிழ் நடைமுறையிலேசைவ உலகத்திற்கு எடுத்துக் காட்டியவர்.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என்ற ஒழுங்கிற்கு தானும் வாழ்ந்து ஏனைய மக்களையும் வாழவைத்த பெருமை உடையவர். இவரின் வயோதிப காலத்தில் சுதுமலையில் தன்மகளின் வீட்டில் பேரப் பிள்ளைகளுடன் அளவளாவி மகிழ்ந்து இருந்தார். அந்நாளில் திடீரென சுகவீனமுற்று இறைபதம் எய்தினார். இவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த கவலையை தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி**

*சிவஸ்ரீ.ஐ.மஹேஸ்வரக் குருக்கள்*
சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள்
ஆலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் வல்லாளன் நடராசா

வலிகாமத்தில் வண்டமிழ் வளம் சேர்க்கும் பண்ணில் முதன்மை பெறுவதும் முன்னின்று உழைத்ததும் குரும்பசிட்டிக் குறைவிலாக்கிராமமாகும். ஆன்ற தமிழ்ப் புலமை மிக்க அறிஞர்களை ஈன்றெடுத்த தமிழ் மண் அது.

கவிஞர் கந்தவனம், கனகசெந்திநாதன், கலைப்பேரரசு பொன்னுத்துரை எனப்பட்டியல் மிகநீளும். எங்கள் தமிழமுதம் நடராசா அவர்களை முட்டு இளந்தாரியாக நான் இருக்கும் போது அறிவேன்.தமிழ்ச் சிறார்கள் செவ்வனே தமிழினிக்கச் சிறப்புச் செய்த சீராளன் இலக்கிய மஞ்சரி என்னும் தொடர் நூலை இனிதே மாணவர் பயில ஆக்கம் செய்த சிற்பி.

சிந்தனையும் செயலூக்க மும் உள்ள பண்டிதர் ஐயா வையகம் பயனுற வாழ்ந்த பெருமகன் இறந்ததும் இறவாப் பெருமை கொண்ட சான்றோன் எனத் துணிந்து கூறலாம். ஆடலும், பாடலும், ஆக்கத்திறனும் எழுத்தாற்றலும் இயல்பூக்கமாய்த்தழைத்திட சன்மார்க்க நெறிகொண்ட பெருமை யிற் பங்கு கொண்டவர். சான்றோர் பலர் யான் வாழுமூர் எனப் பிசிராந்தையர் கூறியதோடு அல்லாமல் பண்டிதர் நடராசா அவர்களும் பெருமை கொள்ளத்தக்க மண்ணிலே உதித்தவர். இன்றுவிண்ணிலே பேரானந்தப் பெருவாழ்வை எய்தியுள்ளார்.

**வையகம் உள்ளவரை அவர் நாமம் வாழும்**

***கோ. சி. வேலாயுதம்***
**அந்நாள் கல்விப் பணிப்பாளரும்**
**இந்நாள் வலம்புரி பிரதம ஆசிரியரும்**

யாழ்ப்பாணம்
30-8-2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் (பண்டிதர் ) வ.நடராசா அவர்கள்

"மனிதப்பிறவி மாண்பு மிக்கது" என்பது அறிஞர்களின் கருத்தாகும்."மனிதன்" என்ற சொல்லுக்கு இலக்கணமாய் அமைந்து வாழ்ந்தவர்கள் ஒருசிலரேயாவர். அவர் களுள் அமரர் (பண்டிதர்) நடராசா அவர்களும் ஒருவர். அவர்கள் தாம் மேற்கொண்ட ஆசிரியப் பணியை மனத்தூய்மையுடன் ஆற்றி மக்கள் மத்தியில் நன்மதிப்புடன் விளங்கியவர். அவரின் ஞாபகார்த்தமாக வெளியிடப்படும் மலருக்கு சில வார்த்தைகள் எழுதுவதில் என் மனம் ஆறுதலடைகின்றது.

1948 ஆம் ஆண்டளவில் ஆசிரிய கலாசாலை பிரவேசப் பரீட்சைக்கான வகுப்புகள் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயத்தில் நடைபெற்று வந்தன. தமிழ் இலக்கணம், தமிழ் இலக்கியம் ஆகிய பாடங்களை கற்பிப்பதற்காக பண்டிதர் பலர் வருவார்கள்.அவர்களிலே அமரர் அவர்களும் அடங்குவர். அக்காலத்தில் யான் மாணவனாக அங்கே கல்விகற்று பல அநுபவங்களைப் பெற்றது இன்னும் என் மனத்தில் ஆழமாகப் பதிந்துள்ளது. கற்பித்தல் தொழிற்பாடுகளில் பண்டிதர் ஐயா அவர்கள் மாணவர் மனம் கொள்ளுமாறு போதித்தமை எனது மனத்திரையில் நன்கு தெரிகின்றது.

நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர்சுதுமலையில் அவரைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. இராணுவ நடவடிக்கை காரணமாக தாம் வாழ்ந்த குரும்பசிட்டி என்னும் ஊரினின்றும் இடம்பெயர்ந்து அவரின் மருகர் சண்முகராசா அவர்களுடன் சுதுமலையில் வாழத்தொடங்கிய காலம் முதல் மீண்டும் ஐயா அவர்களுடன் நெருங்கிய தொடர்பு உண்டானது. ஆலயங்களிலும் இல்லங்களிலும் எங்கள் சந்திப்பு நிகழும். அவ்வேளைகளில் தமிழ் சமயம், இக்காலச் சமூகம் போன்ற விடயங்கள் எங்கள் கலந்துரையாடலில் இடம்பெறும்.இவ்வாறான தொடர்புகள் மூலம் அமரர் அவர்களின் உயர் பண்புகளையும் கல்வி, அறிவு, ஞானங்களையும் என்னால் அறிந்து கொள்ள முடிந்தது. அவரது கொள்கைகளையும் இலட்சியங்களையும் உணர்ந்து அவருடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கைகளையும் இலட்சியங்களையும் உணர்ந்து அவருடன் தொடர்பு கொள்வதைப் பெரும்பேறாகக் கருதினேன். அவர்கள் உண்மை, நேர்மை, கண்ணியம், கட்டுப்பாடு, ஈவுஇரக்கம், ஜீவகாருண்ணியம் ஆகிய நற்குணங்களின் உறைவிடமாக விளங்கினார்கள். நிலம், மலை, நிறைகோல்,மலர் நிகர் மாட்சியுள்ள நல்லாசிரியனாக வாழ்ந்த பெருமை ஐயா அவர்களுக்குரிய தனிச்சிறப்பாகும்.

ஆசிரியர் அவர்கள் மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்து காட்டியவர்.ஆசிரியராகப் பணியாற்றி மாணவர்களின் உயர்ச்சிக்கு வழிவகுத்தவர்; நூல்கள் பல ஆக்கியவர்; "இறை ஒருவர்" என்ற தலைப்பில் அவர்கள் எழுதிய நூல் அவரின் புலமையை எடுத்துக் காட்டுகின்றது. முதிர்ந்த வயதிலும் இந்நூலை எழுதி வெளியிட்டமை அவரின் ஆற்றலுக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். அன்பும் பண்பும் அறிவும் ஆற்றலும் மிக்க ஆசிரியர் அவர்களின் பூதவுடல் அழிந்தாலும் புகழ்உடல் என்றும் நிலைத்து நிற்கும். நண்பனாய் மந்திரியாய் நல்லாசானுமாயிருந்து ஐயா காட்டிய வழியில் நின்று ஒழுகுவோமாக.

உயர் தகைமைகள் கொண்ட சைவப் பாரம்பரியங்களையும் தமிழ் மரபுகளையும் பேணிப்பாதுகாத்த நல்லதொரு குடும்பத் தலைவனை இழந்து துயருறும் அமரரின் மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் அனைவரின் துன்பத்திலும் பங்கு கொள்ளுவதோடு அன்னாரின் ஆன்மா சாந்தி பெறவும், நன்னிலை யடையவும் எல்லாம் வல்ல இறைவனின் பாதக்கமலங்களை வேண்டுகிறோம்.

**ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!**

**இளைப்பாறிய ஆசிரியர்**
திரு.சே.பொன்னம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனக்கினிய நல்லாசான்

என்இளமை காலத்து எனக்கினிய நல்லாசான்
தன்னுடைய புலமையினால் எனை வளர்த்த சான்றோன்
பொன்னுடலை விட்டகன்றான் என்றவுரை செவியில்
மின்னிறத்து அனற்பிழம்பாய்ப் புகுந்துழலும் நொந்தேன்

எழுத்துச்சொல் பொருளென்ற இலக்கணமெனக் குரைத்தோன்
பழுத்தபெரும் புலவர்களின் பாடற்சுவை தந்தோன்
அழுக்கறுத்த நெஞ்சுடையான் அந்தண்மை பூண்டோன்
முழுப்பொருளும் "இறையொருவன்" முடிபுரைத்தஞானி

நல்லறிஞர் பலர்வாழும் நாவற் குழியூரில்
தொல்குலத்து உயர்மரபில் தான்பிறந்து வளர்ந்தோன்
கல்விநிறை குரும்பசிட்டி மனைவாழ்விற் புகுந்தோன்
எல்லவரும் போற்றுபுகழ் எண்மரையும் ஈந்தோன்

பண்டிதருட் புகழ்பூத்த பண்டிதமணியே அன்னான்
தண்டமிழின் தரிப்பிடமாய்த் தனையாக்கித் தக்கபெரும்
பண்புநிறை குணநலத்து நடராசா என்பா ரான்மா
எண்குணத்தான் தாள்வாழ இறைஞ்சிநாம் அஞ்சலிப்போம்

முன்னாளில்ஈழ கேசரியை அணிசெய்தே
          இனியபல கட்டுரைகள் தான்வரைந்தோன்
பின்னாளிற்கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில்
          பாடநூல் பலவற்றை ஆக்கிவைத்தோன்
எந்நாளும் எழுத்துலகில் மன்னனென்றே
          சொன்னாலு மதுபெரிதாய்ப் பொருந்துமன்றோ
பொன்னாரும் மேனியனின் சேவடிக்கீழ்ப்
          போயடைந்தான் சாந்திபெற அஞ்சலிப்போம்

**வே.ஆறுமுகம்பிள்ளை**
முன்னாள் ஆசிரியர்
அருணோதயக்கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருமைமிகு பண்டிதர்

குரும்பசிட்டி கிராமத்திற்குப் பெருமைசேர்த்த பெருந்தகையோரில் அமரர் - பண்டிதர் வ.நடராசா அவர்களும் குறிப்பிடத்தக்க ஒருவராவார். குரும்பசிட்டியில் "பண்டிதர்"எனக் குறிப்பிட்டால் அது அமரர் நடராசா அவர்களை மட்டுமே குறிக்கும். தமிழ்மொழியில் பாண்டித்தியம் பெற்றிருந்த அவர், பண்டிதர் என்ற பட்டத்திற்கு இலக்கணமாக விளங்கினார். அத்துடன் தமது பன்முகப்பட்ட பணிகளின் மூலம் சமூகமேம்பாட்டிற்குப் பெரும்பணி ஆற்றியுள்ளார்.

## ஆசிரியப்பணி

தமிழ்மொழியைச் சுவைபடக் கற்பிக்கும் ஆற்றல், மொழியாசிரியர் அனைவர்க்கும் இயல்பாக அமைவதில்லை. இலக்கணத் தெளிவும், இலக்கிய நயப்பாற்றலும் மிக்கவர்களுக்கே மொழியைக் கற்பித்தல் எளிதாக அமையும். பண்டிதர் அவர்கள் யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் தமிழ்மொழியைக் கற்பித்த காலத்தில் புகழ்பூத்த ஆசிரியராக விளங்கினார். மாணவர்களால் பெரிதும் விரும்பப்பட்டவராகவும், மதிக்கப்பட்டவராகவும் விளங்கினார் பண்டிதரிடம் பயின்ற மாணவர்கள் அவரது கற்பித்தற் திறனை என்றென்றும் நயந்து இன்பறுவர். வியந்து போற்றுவர்.

## நூலாக்கப்பணி

கல்வியை அரசு பொறுப்பேற்பதற்கு முன் உள்ளூரின் தனிப்பட்ட நிறுவனங்களே பாடநூல்களை வெளியிட்டன. இத்துறையில் ஈழகேசரி பொன்னையா அவர்களால் நிறுவப்பெற்ற "வட- இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம்" குறிப்பிடத்தக்க பணியாற்றியது. இப்பதிப்பகத்தின் வெளியீடாக வெளிவந்த "இலக்கியமஞ்சரி" என்ற நூற்தொகுதிகளின் ஆசிரியராக விளங்கி அரும்பணி புரிந்தவர் பண்டிதர் அவர்கள். ஒவ்வொரு வகுப்பிற்கும் ஏற்ற தரங்களில் "இலக்கிய மஞ்சரி" நூல்கள் ஆக்கப்பட்டிருந்தன. பண்டிதர் வ.நடராசா அவர்களும், இரசிகமணி கனகசெந்திநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களும் ''இலக்கிய மஞ்சரி'' தொகுதிகளின் இணைப்பாசிரியர்களாக விளங்கினர்.

இந்நூல்களில் - பழந்தமிழ் இலக்கியங்களில் இருந்து நல்ல இலக்கியக் காட்சிகள் தெரிவு செய்யப்பட்டு எளியமொழிநடையில் இனிய உரைநடையில் வழங்கப்பட்டிருந்தன.

இவைதவிர பண்டிதர் அவர்கள் பெயர் பொறிக்கப்படாவிடினும் பல பாடநூல்களின் ஆக்கத்தில் பெரும்பங்கு வகித்துள்ளார். அக்காலத்து மாணவ பரம்பரையின் மொழிவளர்ச்சியில் இவரது நூல்கள் பெரும்பங்கு வகித்துள்ளன. இளம் தலைமுறையின் இலக்கிய ஆர்வத்தை வளர்த்தெடுப்பதில் இவை முக்கிய பங்கு வகித்தன.

### *சமூகப்பணி*

நல்லாசிரியராக விளங்கிய பண்டிதர் அவர்கள் குரும்பசிட்டிக் கிராமத்தின் அபிவிருத்திக்காகவும் பல்வேறு துறைகளில் பணியாற்றியுள்ளார்.பல பொதுப்பணி மன்றங்களில் ஆலோசகராக விளங்கி, இளைஞர்களின் நன்முயற்சிகளுக்கு ஊக்கமளித்து, அவர் களை நன்னெறிப்படுத்தி சிறந்த வழிகாட்டியாகவும் திகழ்ந்தார். இளைஞர்களின் திறன்விருத்திக்கும், ஆளுமை வளர்ச்சிக்கும் பெருந்துணை புரிந்தார்.

இவ்வாறு ஆசிரியப்பணி - நூலாக்கப்பணி - சமூகப் பணி ஆகியவற்றின் மூலம் பொதுவாகத் தமிழ்ச் சமூகத்திற்கும், சிறப்பாக எமது கிராமத்திற்கும் பெருந்தொண்டாற்றிய பண்டிதர் அவர்கள் என்றென்றும் நன்றியுடன் நினைவு கூரப்படுவார்.

**அன்னாரின் ஆன்மா சாந்தியடைவதாக.**



ஆ.மகாதேவன்
*விரிவுரையாளர்*
*பலாலி ஆசிரியர் கலாசாலை*
*திருநெல்வேலி.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவு

1) இலங்கையின் தலை நகரம் எது? ஸ்ரீ ஜயவர்த்தனபுர
2) இலங்கையில் இலவசக் கல்வித்திட்டத்தைஅறிமுகப்படுத்தியவர் யார்? **C.W.W.** கன்னங்கரா
3) இலங்கையின நிறைவேற்று அதிகாரம் கொண்ட முதல் ஜனாதிபதி யார்? ஜே. ஆர்.ஜயவர்த்தனா
4) இலங்கையின் தற்போதய பாராளுமன்றத்தைக் கட்டிக் கொடுத்த நாடு எது? யப்பான்
5) இலங்கையின் சட்டவாக்க பீடம் எவ்வாறு அழைக்கப்படும்? பாராளுமன்றம் / தேசியப்பேரவை
6) உ ங்ராட் தாபனத்தின் தலைவராக இருந்த இலங்கையர் யார்? காமினி கொறியா
7) இலங்கையின் தெங்கு முக்கோணப் பிரதேசங்கள் எவை? கொழும்பு, குருணாகல், சிலாபம்
8) இலங்கையில்காணப்படும் முதற்காடு எது?சிங்கராசாவனம்
9) இலங்கையில் முதல்விமானம் தரையிறக்கப்பட்ட இடம் எது? இரத்மலானை
10) இலங்கையின் தேசபிதா என அழைக்கப் படுபவா் யார்? **D.S.** சேனநாயக்கா
11) இலங்கையின் பாராளுமன்ற நடைமுறைகளை பதிவு செய்யும் பதிவேடு யாது? ஹன்சாட்
12) இலங்கை வெண்தாமரை இயக்கத்தின் தலைவர் யார்? மங்கள சமரவீர
13) இலங்கையின் அதிவேக ஓட்ட வீராங்கனை யார்? சுசாந்திக்கா ஜெயசிங்க
14) இலங்கையின் உள்ளூராட்சித் துறையில் தற்போதுகாணப் படும் மாநகர சபைகள் எத்தனை? 14
15) விஞ்ஞான கற்பனைக் கதைகள் எழுத பெயர் பெற்ற இலங்கைக் குடியுரிமை பெற்ற அறிஞர் யார்? ஆதர் சீ கிளாக்
16) ஐக்கிய நாடுகள் சபை **U.N.O** எப்போது உருவாக்கப் பட்டது? 1945 ஒக்டோபர் 24ஆம் திகதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17) வங்களாதேசின் சர்ச்சைக்குரிய பெண் எழுத்தாளர் யார்?
**தஸ்லிமா நஸ்ரின்**

18) இன்ர நெற்றினால் ஏற்படக்கூடிய மிகக்கூடிய பாதிப்புஎன்ன?
**கலாச்சார சீரழிவு**

19) கிழக்கு மேற்கு ஜேர்மனிகள் எப்போது இணைக்கப்பட்டன?
**1990 ஆம் ஆண்டு**

20) ஸ்ரேலின் புலனாய்வுப் பிரிவு என்ன பெயரால் அழைக்கப் பட்டது? **மொசாட்**

21) உலக ஆசிரியர் தினம் எப்போது கொண்டாடப் படுகிறது?
**ஒக்ரோபர் 6 ஆம் திகதி**

22) நவீன ஒலிம்பிக் போட்டி ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது?
**1896 ஆம் ஆண்டு**

23) உலக கிரிக்கற் விளையாட்டின்சாதனை ஏற்படுத்தியமைக்கு கலாநிதிப் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டவர் யார்?
**இந்தியாவைச் சேர்ந்த சுனில் கவாஸ்கர்**

24) 3651/4 நாட்களைக் கொண்ட கலண்டரை வகுத்தவர் யார்?**கிரேக்கர்**

25) 20 ஆம் நூற்றாண்டின் தலைசிறந்த போராட்ட விடுதலை வீரராக வர்ணிக்கப் படுபவர் யார்?**நெல்சன் மண்டேலா**

26) ஏறக்குறைய 40 வருடங்களின் பின்னர் 1999இல் ஜனநாயக முறையில் தேர்தல் நடைபெற்ற நாடு எது?
**இந்தோனேசியா**

27) உலகில் அதிகமாகப் பேசப்படும் மொழி எது?**சீன மொழி**

28) நெருப்பு வளையம் என அழைக்கப்படும் சமுத்திரம் எது?
**பசுபிக் சமுத்திரம்**

29) நோபல் பரிசைப் பெற்ற முதல் இந்திய விஞ்ஞானி யார்?
**சி.வி ராமன்**

30) உலகிலேயே மிகப் பிரமாண்டமான சுப்பமார்க்கட் எங்கு உள்ளது? **அமெரிக்காவில் நியூயோர்க்கிலுள்ள "மக்சீஸ் சொப்பிங் சென்ரர்"**

31) உளப்பகுப் பாய்வு சிகிச்சை முறையை அறிமுகப்படுத்திய வர் யார்? **சிக்மன் பிராயிட்**

32) 70 வது ஒஸ்கார் விருது வழங்கல் வைபவத்தில் 11 ஒஸ்கார் விருதுகளை வென்ற படம் யாது? **ரைட்ரானிக்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33) 1999 ஆம் ஆண்டில் மருத்துவத் துறைக்கான நோபல் பரிசை பெற்றவர் யார்? **ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த மருத்துவ நிபுணர் "வின்டர் குளோபல்"**

34) ஆசியாவின் கொலனி ஆதிக்கத்தை முடித்து வைத்த நாடு எது? **மக்காவ் தீவு**

35) பத்தாயிரமாம் ஆண்டுப் பிறப்பைத் துக்கதினமாக அனுஷ்டித்த நாடு எது? **ஈரான்**

36) ஆசிய பசுபிக் நாடுகளுக்கான பொருளாதாரக் கொமிசன் எங்குள்ளது? **பாங்கொக்**

37) பூகம்பத்தைஅளவீடு செய்யும் அலகு எது? **ரிக்டர் அளவு**

38) சர்வதேச விமானப் போக்கு வரத்தின் தலைமையகம் எங்குள்ளது? **மொன்றியல்**

39) மனித உடலின் மிகப்பெரிய சுரப்பி எது? **ஈரல்**

40) படச்சுருள்களில் காணப்படும் சுரப்பியாது? **வெள்ளிஎலைட்டுகள்**

41) ஒளியை அளக்கும் அலகு எது? **டெசிபெல்**

42) Y 2K பிரச்சினை என்றால் என்ன? **கணணியின் முக்கிய செயற்பாடுகள் 1999 டிசெம்பர் 31 நள்ளிர12மணியுடன் தடைப்படும் பிச்சனையைக் குறிக்கின்றது**

43) நோபல் விருதை முதன்முதலில் வென்ற பெண்மணி யார்? **மேரி கியூரி அம்மையார்**

44) ஐக்கிய அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு நிகழ்ச்சித் திட்டத்துக்குப் பொறுப்பாக உள்ள நிறுவனம் எது? **நாசா**

45) விண்வெளிக்குச் சென்ற முதல் வீராங்கனை என்ற பெருமையைப் பெற்ற பெண்மணி யார்? **வலன்ரீனா ரெடிஸ்கோவ்**

46) மருத்துவத்தின் தந்தையெனப் போற்றப் படுபவர் யார்? **கிப்போக் கிறட்டீஸ்**

47) தொலைக்காட்சி ஒளி பரப்பிற்காகச் செய்மதியை முதன் முதலில் பயன்படுத்திய நாடு எது? **கனடா**

48) இன்ரநெற் என்றால் என்ன? **பல்லாயிரக் கணக்கான கணனிகள் ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்ட ஒரு வலைப்பின்னல் இன்ரநெற் ஆகும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

49) உலகில் எரிமலை அதிகமாக உள்ள நாடு எது?
இந்தோனேசியா

50) எகிப்தின் புதிய பெயர் என்ன? ஐக்கிய அரபுக் குடியரசு
**(U.A.R)**

51) செஞ்சிலுவைச் சங்கம் யாரால், எப்போது, எங்கு, ஆரம்பிக்கப்பட்டது? **ஹென்றி நோலிட்டினால் 1896ஆம் ஆண்டு சுவிற்சிலாந்தில் ஆரம்பிக்கப் பட்டது**

52) F.I.A என்பதன் பொருள் யாது?
சர்வதேச விளையாட்டுச் சம்மேளனம்

53) M.C.C என்பதன் விரிவு என்ன?**Marley bourne cricket club**

54) சாவ் (S.A.N.S.F)என்பதன் விரிவான பொருள் என்ன?
**தெற்காசிய நாடுகளின்விளையாட்டு சம்மேளனம்**

55) எவரெஸ்ட சிகரத்தில் ஏறிய முதல் பெண்மணி யார்?
திருமதி **ஜங்கோட்பேய்**

56) உலகின் அதிவேகப் பயணிகள் விமானம் எது?
**கொன்கோட், இதன் வேகம் 2333கிமீ/ மணி**

57) தற்போது ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும்வல்லரசு நாடுகள் 6ம் எவை?
**ஐக்கிய அமெரிக்கா, இரஸ்ஸியா, பிரித்தானியா, சீனா,பிரான்ஸ்,இந்தியா என்பன**

58) ஐக்கிய நாடுகள் சபையின்தற்போதைய பொதுச்செயலாளர் யார்? **கொபி அனான்**

59) பின்வரும் இவர்கள் யார்?
பில் கிளின்ரன் --**அமெரிக்க ஜனாதிபதி**
விளாடிமின் புடின் --**இரஸ்ஸியப் பிரதமர்**
அட்டல் பிஹாரி வாஜ்பேய் --**இந்தியப் பிரதமர்**
யசீர் அரபத் --**பலஸ்தீன விடுதலை இயக்க தலைவர்**
முகாபே --**சிம்பாப்பேயின் தலைவர்**
ஜெனரல் பர்மேஸ் முஹாரப் --**பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியாளர்**
சுதாங் ஹுசைன் --**ஈராக்கின் தலைவர்**

60) 1992 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் எங்கே நடைபெற்றன? **ஸ்பெயினிலுள்ள பர்சிலோனியா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

61) 1996ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் எங்கே நடை பெற்றன? அமெரிக்காவிலுள்ள அட்லாண்டா நகரில்

62) அடுத்த ஒலிம்பிக் போட்டிகள் எங்கே எப்போது நடைபெற இருக்கின்றன? 2000ஆம் ஆண்டு செப்ரெம்பர் 15ஆம் திகதி அவுஸ்திரேலியாவிலுள்ள சிட்னியில்

63) விண்வெளிக்கு அனுப்பப்பட்ட முதல் வாகனம் எது?
சோவியத்தின் ஸ்புட்னிக் 1

64) முதலில் வியாழனை அணுகிச் சென்று சோதனையிட்ட செயற்கைக் கோள் எது?
அமெரிக்க ஐக்கிய அரசுகளின பயனியர்-10

65) விண்ணில் நடந்த முதல் மனிதர் யார்?
அலக்ஸிலயநோவ்

66) செவ்வாயில் இறங்கிய முதல் துணைக்கோள் எது?
மார்ஸ்-3

67) அமெரிக்கா அனுப்பிய முதல் துணைக்கோள் எது?
எக்ஸ்புளோறர் -1, 1958 இல்

68) இந்தியா அனுப்பிய முதல் துணைக்கோள் எது?
ஆரியப் பட்டா

69) உலக நாடுகளின் தேசியப் பறவைகள் எவை?

| | | | |
|---|---|---|---|
| டென்மார்க் | - வானம்பாடி, | பர்மா | - மயில் |
| கனடா | - வாத்து, | கொலம்பியா | - பருந்து |
| ஜேர்மனி | - வெள்ளைக்கொக்கு | அமெரிக்கா | - கழுகு |
| இங்கிலாந்து | - றொபின், | மலேசியா | - மைனா |
| பெல்ஜியம் | - செஸ்ட்ரல், | தென்னாபிரிக்கா | - கொக்கு |
| இலங்கை | - காட்டுக்கோழி, | இந்தியா | - ஆண்மயில் |
| அவுஸ்திரேலியா | -கங்காரு | | |

70) "உலகெல்லாம் தமிழ்முழக்கம் செழிக்கச்செய்வோம்" என்று கூறிய தமிழ்ப் பெரியார் யார்?

**மகாகவி சுப்பிரமணிய பாரதியார்.**

இவர் "**தமிழ்மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்**" என்றும் கூறியவர். இந்திய சுதந்திரத்தை ஊக்குவிக்கும் தேசியப் பாடல்களையும் பாடியவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரெலக்ஸ் (Telex)

- ரெலிபிறின்ரர் (Teleprinter) என்ற தொலை அச்சு இயந்திரத்தின் உதவியினால் கம்பி மூலம் அல்லது ரேடியோ மூலம் அனுப்பப்படுகின்ற செய்தியே Telex எனப்படுகிறது.
- Telex இல் ஒவ்வொரு எழுத்துக்கும் ஒவ்வொரு சங்கேத மொழி (Code word) வைத்திருப்பார்கள்.
- இதன் மூலம் ஒரு நிமிடத்திற்கு நூறு சொற்கள் வீதம் செய்திகளை அனுப்பக்கூடியதாகவுள்ளது.

## லேசர்(Laser)

- Light Amplification by Stimulated Emission of Radiation என்ற ஆங்கில வார்த்தையின் சுருக்கமே லேசர் ஆகும்.
- இது சாதாரண ஒளியைவிட மிகச்சீரான செறிவான மிகவும் சக்திவாய்ந்த ஒளிக்கதிராகும். இது ஒரே நிறமுள்ளது. குறிப்பிட்ட ஓர் திசையில் மட்டுமே செல்கின்றது.
- இதன் சக்தியைக் கொண்டு வன்மையான வைரத்தைக்கூட துளையிட முடியும்.
- மருத்துவத்தில் கண்ணிலுள்ள இரத்தக் கட்டிகளை கரைப்பதற்கும் இதனைப் பயன்படுத்துகிறார்கள்.
- இதுதவிர மிகவும் தொலைவிலுள்ள தூரங்களை நுட்பமாக அளப்பதற்கும், கம்பியூட்டர் செய்தித் தொடர்புகளுக்கும் இதனைப் பயன் படுத்தலாம்.

## சோனார் (Sonar)

- இது Sound Navigation And Ranging என்ற வார்த்தையின் சுருக்கமாகும்.
- வெளியான இடங்களில் ரேடர் பயன்படுவது போன்று நீரினுள் காணப்படும் நீர் மூழ்கிக்கப்பல்கள் கடலின் அடியிலுள்ள பனிப்பாறைகள், போன்றவற்றின இருப்பிடத்தை கண்டுபிடித்து ஆபத்துக்களைத் தவிர்க்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கடலின் ஆழத்தை அறிவதற்கும் கடலின் அடியில் மீன் கூட்டங்கள் இருக்குமிடத்தைக் கண்டுபிடிப்பதற்கும் கூட இதனைப் பயன் படுத்தலாம்.
- இதில் எதிரொலித்தத்துவம் பயன்படுத்தப்படுகின்றது.

## ரேடர் (Rader)

- இது Radio Detecation And Ranging என்ற ஆங்கில வார்த்தையின் சுருக்கமாகும்.
- இது ஓர் தனிக்கருவியல்ல. பல்வேறுபட்ட கருவிகளினது ஓர் கட்டமைப்பாகும்.
- ரேடர் மூலம் மனித கண்ணுக்கு புலப்படாத தொலைவிலுள்ள இருள், மேகம், மூடுபனி என்பவற்றால் மறைக்கப்பட்டுள்ள பொருட்களை இன்னதென அறிந்து அவற்றின் இருப்பிடத்தையும் நிர்ணயிக்க முடியும்.
- இதில் எதிரொலித் தத்துவம் பயன்படுத்தப்படுகின்றது.
- இது முதன்முதலில் இங்கிலாந்தில் Robert Watson Walt என்பவரால் அமைக்கப்பட்டது. இதனாலேயே இரண்டாம் உலகப் போரின் போது ஜேர்மன் நாட்டு யுத்த விமானங்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டது.

## ஃபக்ஸ் (Fax)

- தொலைபேசி இணைப்புக்கள் (Line) மூலம் படங்களையோ அல்லது கடிதங்களையோ அனுப்பும் முறை Fascimile transmission இதன் சுருக்கமே ஃபக்ஸ் ஆகும்.
- இதில் தொலைபேசியுடன் ஃபக்ஸ் மெசின் இணைக்கப் பட்டிருக்கும். அனுப்ப வேண்டியதை இதனுள் செருகி அனுப்பவேண்டியவரின் ஃபக்ஸ் உடன் இணைக்கப்பட்ட தொலைபேசி எண்களைச் சுழற்ற நாம் அனுப்பியது போன்ற செய்தி அவரது ஃபக்ஸ் மெசினில் உருவாகிவிடும்.
- இதற்குரிய கட்டணம் சாதாரணமாக தொலைபேசிக்கு அறவிடும் கட்டணம்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடல் மைல் (Nautical mile)

- கப்பல்கள், விமானங்கள் போன்றவற்றின் வேகங்கள் "நொட்ஸ்" (Knots) என்ற அலகில் அளவிடப்படுகின்றது.
- ஒரு மணித்தியாலத்திற்கு அது எத்தனை கடல்மைல் வேகத்தில் செல்கின்றது என்பதன் சுருக்கமே "நொட்ஸ்" ஆகும். (Knot=Nantical mile/hour)
- ஒரு கடல்மைல் தூரம் என்பது 6080 அடியாகும். (இது சாதாரண மைல் தூரத்திலும் சற்று அதிகமாகும்)

## பேர்முடா முக்கோணம் (Bermuda Triangle)

- இது அமெரிக்காவின் கிழக்குக் கடற்கரையை அண்மித்த அட்லாண்டிக் சமுத்திரத்திலுள்ள ஒரு முக்கோண வடிவ கடற்பரப்பாகும்.
- இது புளோரிடா (Florida), பியூர்ரோறிக்கா (Puertorico), பேர்முடா (Bermuda) ஆகிய மூன்று இடங்களையும் இணைக்கின்றது.
- இப்பகுதிக்குள் செல்லும் பெரும்பாலான விமானங்களும், கப்பல்களும் காணாமல் போனமையாலேயே இப்பகுதி பிரபல்யம் பெற்றது. இதனால் இதனை பிசாசு முக்கோணம் (Devil triangle) எனவும் குறிப்பிடுவர்.
- உண்மையில் இவ்வதிசய மறைவுகளுக்கு சுழிகள், சுழல்புயல்கள் போன்ற இயற்கை காரணியேகாரணமாக இருக்கலாம் என்று விஞ்ஞானிகளால் கருதப்படுகின்றது. எனினும் இம்மாதத்துக்கான முடிச்சு முற்றாகவே அவிழ்க்கப்படவில்லை.

## பச்சை வீட்டு விளைவு (Green House effect)

- எமது சூழல் வெப்பநிலை உலகளாவிய ரீதியில் படிப்படியாக அதிகரித்து வருகின்ற ஓர் தோற்றப்பாடே பச்சைவீட்டு விளைவு எனப்படுகின்றது.
- தீவிர காடழித்தலினாலும், உயிர்ச்சுவட்டு எரிபொருட்கள் அதிகளவில் தகனமடைவதனாலும் வளிமண்டலத்திலுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காபனீரொட்சைட்டு ($CO_2$) வாயுவின் செறிவு அதிகரித்து வருவதே இதற்குரிய பிரதான காரணமாகும்.

- இதன் விளைவாக சமுத்திரங்களின் நீர் மட்டம் உயர்வடைந்து அனேகநாடு நீரினுள் முற்றாக மூழ்கும் அபாயம் உண்டு. எனவே வெள்ளம் வருமுன் மரங்களை வீடு தோறும் நாட்டுவோம்.

## ஓசோன் ஓட்டை (Ozone hole)

- ஓசோன் (O3) என்பது ஓர் வாயுவாகும். இது தரையிலிருந்து 20-30 Km தூரத்திற்கு அப்பால் ஓர் போர்வை போன்று காணப்படுகின்றது.
- இந்த ஓசோன்படையானது சூரியனிலிருந்து வருகின்ற புற ஊதாக்கதிர்களை (Ultra Violet) தரையை அடைய விடாமல் தடுப்பதில் பெருமடங்கு வகிக்கின்றது.
- இவ்வாறான அதீத ஊதாக்கதிர்கள் மனிதனில் தோல் புற்று நோய் போன்றவற்றை ஏற்படுத்தும் தன்மையுள்ளவை.
- மனிதனால் உருவாக்கப்பட்ட பலவேறு தேவைகளுக்கும் பயன்படுகின்ற குளோரோ புளோரோ காபன் (cfc) எனப்படுகின்ற வாயுவே இந்த ஓசோன்படை அழிக்கப்பட்டு அதில் துவாரம் ஏற்படுவதற்கு பிரதான காரணியாகும்.
- இதனால் உலகநாடுகள் யாவும் "CFC Free" (CFC. இல்லாதது என்று இருப்பது ஏன் என்பது இப்போது உங்களுக்குப் புரிகிறதல்லவா?


## சிலிக்கன் சில்லுகள் (Silicon Chips)

- இவை மிகச்சிறிய பரப்பளவுள்ள மிகமெல்லிய வட்டத் தட்டுக்களாகும். இதனால் நுண்சில்லுகள் (Microchips) எனவும் குறிப்பிடப்படும்.
- இது சிலிக்கன் என்ற மூலகத்தினாலான ஓர் கறுப்பு நிறமுள்ள பளிங்காகும்.
- எம்மில் சிலரது மூளையை போலன்றி இதற்கு நினைவாற்றல் (Memory) தன்மை அதிகமாகவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☞ இவை இலத்திரனியல் சாதனங்களான கல்குலேட்டர், கடிகாரங்கள், போன்றவற்றிற்கு பயன்படும் இது பெருந்தொகையான மின்சுற்றுக்களை தன்னகத்தே கொண்டுள்ளது. உதாரணமாக பெருவிரல் நுனியின் பரப்பளவுள்ள ஓர் சிலிக்கன் சில்லில் 10 மில்லியன் மின்சுற்றுவரை இருக்கலாம்.

## கறுப்புப் பெட்டி (Black box)



☞ இவை விமானங்களில் விபத்துக்கான காரணத்தைக் கண்டறிய உதவுகின்றன.

☞ விமான விபத்தின் பின் அழிவடையாத வகையில் நன்கு பாதுகாக்கப்பட்ட வலுவான பெட்டிகளாகும்.

☞ பெயருக்கேற்றபடியன்றி இவற்றின் உண்மையான நிறம் மஞ்சள் இல்லது செம்மஞ்சள் ஆகும்.

☞ இவற்றில் விமானம் பறந்த வேகம், தரையின் மேலாக பறந்த உயரம், விமானி தரைக்கட்டுப்பாட்டு நிலையத்துடன் மேற்கொண்ட உரையாடல்கள் போன்றன யாவும் பதிவு செய்துவைக்கப்பட்டிருக்கும்.

## திரான்சிஸ்ரர் (Transister)

☞ இது அனைத்து இலத்திரனியல் உபகரணங்களிலும் பெரிதும் பயன் படுத்தப்படுகின்றது.

☞ இது மூன்று குறைகடத்திகளை ஒன்றாக இணைப்பதன்மூலம் உருவாக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்சுற்றுக்களில் திரான்சிஸ்ரர் ஆளியாகப்பயன்படுத்தப் படுகின்றது.

☞ அத்துடன் திரான்சிஸ்ரர்கள் விரியலாக்கிகளாகச் செயற்பட்டு சிறிய மின் சமிக்ஞைகளை பெருமளவில் பெருப்பிக்கவும் உதவுகின்றன.

## எல்நினோ (Elnino)

☞ எல்நினோ என்பது புவி மேற்பரப்பில் ஏற்படும் சடுதியான காலநிலை மாற்றங்களைக் குறிக்கின்றது.

☞ இந்நிலைக்கு சமுத்திரப் பரப்புக்களின் மேல் வீசும் பருவக்காற்றுகளின் போக்கில் ஏற்படும் மாற்றமே காரணமாகும்.

☞ எல்நினோ தாக்கத்தினால் குறித்த சில நாடுகளில் கடும் வறட்சியும், ஏனைய சில நாடுகளில் அதிக மழையால் திடீர் வெள்ளப் பெருக்குகளும் ஏற்படுகின்றன.

☞ 1997ம் ஆண்டில் இந்தோனேசியாவில் ஏற்பட்ட பெரும் காட்டுத் தீயிற்கும் இதுவே காரணமாகும்.

☞ எமது நாட்டில் யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை ஆகிய பிரதேசங்களில் நிலவும் நீண்ட வறட்சி அதி உஷ்ண காலநிலை என்பனவும் எல்நினோவின் தாக்கம் எனக் கருதப்படுகின்றது.

## கழியொலி அலைகள் (Ultra Sound Waves)

☞ மனிதனின் செவியின் செவிப்புல மீடிறன் எல்லைகளுக்கு அப்பாற்பட்ட ஒலியலைகள் கழியொலியலைகள் எனப்படும்.

☞ தற்போது இதய நோய்களை கண்டறியவும், தாயின் கருப்பையினுள் வளரும் குழந்தைகளின் ஆரோக்கிய நிலையைக் கண்டறியவும் இவ்வலைகள் பயன்படுகின்றன.

☞ சிறுநீரகத்தில் தோன்றும் கற்களை அறுவைச் சிகிச்சை இன்றி கழியொலியலைகளால் உடைத்து வெளியேற்ற முடியும்.

☞ உலோகங்களில் காணப்படும் சீரற்ற தடிப்பையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகனங்களில் ஏற்படும் கோளாறுகளையும் அடையாளப்படுத்தி அறிவதற்கும் இவை உதவுகின்றன.

- ஏனைய U.V, X கதிர்கள் போலன்றி இவை எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்துவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது

## கணனி வைரஸ் (Computer Virus)

- ஒவ்வொரு கணனியும் குறிப்பிட்ட சில வேலைகளைச் செய்வதற்கான கட்டளைப் பொறிகளைக் கொண்டிருக்கும்.
- ஆனால் இக்கட்டளைப் பொறிகளின் செயற்பாட்டினைக் குழப்பும் வகையில் சில நிகழ்ச்சித் திட்டங்கள் கணனியினுள் புகுத்தப்படலாம். இவையே கணனி வைரசுகள் எனப்படும்.
- பலவகையான கணனி வைரசுகள் தற்போது இனங்காணப்பட்டுள்ளன. செர்னோபைல் CIH 1.3 என்பன சில கணனி வைரசுக்களாகும்.
- கணனி வைரசுக்களினால் கணனியின் நினைவாற்றல் இழக்கப்படலாம் அல்லது எழுத்துப்பலகை (Key board) பூட்டுப்படலாம் அல்லது கணனியின் ஒழுங்கான செயற்பாடு காரணமின்றி மாறலாம்.
- தற்போது கணனி வைரசுக்களுக்கு எதிரான நிகழ்ச்சி நிரல்கள் (Antiviral programmes) அதிகளவில் பயன்படுத்தப் படுகின்றன.

## அகச்சிவப்புக் கதிர்கள் (Infra red rays)

- அகச்சிவப்புக்கதிர்கள் மின் காந்த கதிர்ப்புகளாகும்.
- இவை வெப்பமான பொருட்களில் இருந்து காவல் செய்யப்படுகின்றன.
- இக்கதிர்கள் தற்போது பெரிதும் முக்கியத்துவம் பெற்றுள்ளன. இவற்றுள் சில பின் வருமாறு
  1. மருத்துவத்துறையில் சுவாச வீதம், குருதியோட்டம் போன்ற காரணிகளைத் தீர்மானிக்க உதவுகின்றன.
  2. தொலைவில் உள்ள விண்மீன்களின் வெப்பநிலை, கதிர்வீசல் என்பவற்றைத் துணியப் பயன்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பாறைகளின் வயது, அமைப்பு என்பனவற்றை கண்டறிய உதவுகின்றன.
4. இரவு நேரத் தொலைநோக்கிகளில் இரகசிய நடமாட்டங்களைக் கண்காணிக்க உதவுகின்றன.

## எல்.எஸ்.டி (L.S.D)

- L.S.D என்பது Lyseric acid diethylamide என்பதன் சுருக்கமாகும்.
- இது பங்கசுக்களில் இருந்து தொகுக்கப்படுகின்றது.
- ஆரம்பத்தில் மூளை நுண்ம அமைதிக்கோளாறு என்ற நோய்க்கு மருந்தாகப் பயன் பட்டது.
- ஆனால் தற்போது உற்சாகத்தையும் மன அமைதியையும் தரும் கொடிய போதைப் பொருளாக தற்போது பிரபலமடைந்துள்ளது.
- இப்போதைப் பொருள் நிறமூர்த்தங்களில் பாதிப்பை ஏற்படுத்தி அடுதத சந்ததியினரையும் பாதிப்பிற்குள்ளாக்கவல்லது.

## விழியொட்டி வில்லைகள் (**Contact lens**)

- இவ்வில்லைகள் பார்வைக் குறைபாடுடையவர்களின் மேல் பொருத்தப்பட்டு பயன்படுத்தப் படுகின்றன.
- இவ்வில்லைகளை A.E.Fick என்பவர் முதலில் தயாரித்தார்.
- தற்போது இவ்வில்லைகள் பிளாஸ்ரிக்கினால் தயாரிக்கப் படுகின்றன.
- இவ்வில்லைகளின் விட்டம் 7-8mm ஆகும்.
- இவை 0.1-1 அஅ தடிப்புடையவை.
- இவ்வில்லைகள் விழிவெண்படலத்தை மூடி கண்ணீர்ப் படலத்தின் மேல் ஒட்டியபடி காணப்படுவனவாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈ.சீ.ஜீ (E.C.G)

- Electro cardio graph என்பதன் முன்னெழுத்துச் சுருக்கமே ECG என்பதாகும்.
- Willem Einthoven எனும் விஞ்ஞானியே இம்முறையை அறிமுகப்படுத்தினார்.
- இதயத்துடிப்பின்போது இதயத்தசைகளின் வேறுபட்ட பகுதிகளில் காணப்படும் மின்னழுத்த மாறல்களை இவ்வரைபு காட்டுகின்றது.
- மாதிரியான வரைபில் இருந்து குறித்த நபரின் வரைபு வேறுபடும் விதத்தின் அடிப்படையில் அந்நபரின் இதயத்தின் ஆரோக்கிய நிலை தீர்மானிக்கப்படும்.

## பண்டங்கள் சேவைகள் வரி (GST)


- பண்டங்கள் சேவைகள் வரி (Goods and services Tax) என்பது பண்டங்கள் அல்லது சேவைகளில் உள்ளூர் நுகர்வின்மீதான வரியாகும்.
- இந்நடைமுறை April 99 முதல் இலங்கையில் நடைமுறையில் உள்ளது.
- இலங்கையின் நியாயாதிக்க எல்லைக்குள் வழங்கப்படும் பொருள்கள், சேவைகளின் வழங்குனர்கள் மீதே இவ்வரி விதிக்கப்படும்.
- முதனிலை விவசாயப்பொருள்கள், புத்தகங்கள் நிதிசார் சேவைகள் மருந்தாக்கற் பொருள்கள் போன்ற சிலவற்றுக்கு இந்நடைமுறையில் இருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன.

## Interpol

- International Police Commission என்பதை Interpol இன் விரிவான பதமாகும்.
- சர்வதேச நாடுகள் குற்றவாளிகளைக் கைதுசெய்ய Interpol உதவி வருகின்றது.
- Interpol இன் தலைமைச் செயலகம் லியான்ஸில் உள்ளது.

மருதம் பதிப்பகம்,நெ.ம.ம.வீதி,நெல்லியடி,கரவெட்டி,இலங்கை
☎-070-212229,070-212329,பக்ஸ்-070-212371

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழி

வேதாரணியம் + பாறுவதி

+ மனோன்மணி

ி

ாசன்

| ஜெயலட்சுமி | நித்தியலட்சுமி | சுகிர்தலட்சுமி |
| --- | --- | --- |
| + | + | + |
| சண்முகராஜா | கோபாலமூர்த்தி | லவன் |
| சாதனா | ரஜீவ் | வினோத் |
| றோகன் | | சௌமியா |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# நன்றி நவிலல்

எமது குடும்பத்தின் அணையாவிளக்கு பண்டிதர் நடராசா அவர்கள் இறையடி சேர்ந்த போது அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்து துன்பத்தை பகிர்ந்தோர்க்கும் அஞ்சலி வெளியீடுகளை வழங்கியோர்க்கும் அனுதாபச் செய்தி அனுப்பியோருக்கும் இன்று அந்திமக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் நூல் ஆக்கத்திற்கு உறுதுணையாகவிருந்த திரு.சி.நடராசா அதிபர் வசாவிளான் ம.ம.வி அவர்கட்கும் நூலை அழகு மிளிர அச்சிட்ட நெல்லியடி மருதம் பதிப்பகத்தாருக்கும் எமது இதயபூர்வமான நன்றி அறிதலை தெரிவித்துக் கொள்கிறோம்.

ஓம்

இங்ஙனம்
குடும்பத்தினர்

"ஜமுனா"
சுதமலை மேற்கு,
மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org